எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்


அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் Rg.No.S.159 of 25-8-1965

மலர் - 23 இதழ் - 06 ஆகஸ்ட் - செப்ரெம்பர், 2008 விலை ரூபா 10/-

## முதல் சத்தியாக்கிரகி



சர்வோதயத்தின் சிற்பி புனிதர் வினோபா

சர்வோதயத்தின் சிற்பி வினோபா அடிகளின் 114ஆவது பிறந்த நாள் நினைவு தினம் செப்ரெம்பர் 11 ஆகும். மகாத்மா காந்தியடிகளுக்குப் பின்பு இந்திய தேசத்திலும் வெளி உலகத்திலும் போற்றப்படும் ஒப்பற்ற பெரியார் வினோபாஜி. சத்தியாக்கிரகம் கண்ட மகரிஷியான மகாத்மா காந்தி வினோபாவை முதல் சத்தியாக்கிரகி என்று பெருமை கொள்கிறார். 1940 இல் சேவா கிராம ஆசிரமத்திலிருந்து வினோபா பற்றி காந்தி அடிகள் எழுதிய குறிப்பை வினோபாஜியின் பிறந்தநாள் நினைவாக பிரசுரிக்கிறோம்.

வினோபா பாவே யார்? அவரையே நான் இந்தச் சத்தியாக்கிரகத்திற்காக ஏன் தேர்ந்தெடுத்தேன்? வேறு யாரையும் ஏன் தேர்ந்தெடுக்கவில்லை?

நான் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு 1916ல் வினோபா காலேஜை விட்டு வந்தார். அவருக்கு சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் உண்டு. ஆசிரமம் ஆரம்பித்த போதே அவர் வந்து சேர்ந்தார். ஆசிரமத்தில் எல்லோருக்கும் முன்னால் வந்த அங்கத்தினர்களில் அவரும் ஒருவர். அவர் தமது ஸம்ஸ்கிருதப் பயிற்சியை வளர்ப்பதற்காக ஒரு வருஷ விடுமுறை வாங்கிக் கொண்டு போனார். ஒரு வருஷத்துக்கு முன்னால் எந்த நேரத்தில் அவர் ஆசிரமத்தை விட்டுப் போனாரோ, சரியாக அதே மணி நேரத்துக்கு அவர் ஒரு வருஷம் கழித்துப் பேசாமல்

**வினோபா பற்றி காந்தியடிகள்**

வந்து சேர்ந்தார். அன்றைக்கு அவர் ஆசிரமத்துக்குத் திரும்பி வரவேண்டியவர் என்பதை நான், மறந்தே போயிருந்தேன். ஆசிரமத்தில் சமையல் முதல் மலசலகூடம் சுத்தம் செய்வது வரை, எல்லாவிதமான தொண்டுகளிலும் அவர் ஈடுபட்டிருந்தார். அவருடைய ஞாபகசக்தி ஆச்சரியகரமானது.

சுபாவத்திலேயே அவர் படிப்பில் ஆர்வமுள்ளவர். ஆனால் கூடிய மட்டும் அதிகமான பொழுதை நூல் நூற்பதில் அவர் செலவழிக்கின்றார். அதில் அவர் வல்லவராகிவிட்டார். அதில் அவருக்கு இணையானவர்கள் மிகவும் குறைவு. பரந்த அளவில் நூல் நூற்கும் தொழிலை எல்லாத் திட்டங்களுக்கும் மையமாக அமைத்தால் தான் கிராமங்களின் வறுமை தொலையும் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டவர். இயல்பாகவே அவர் ஒரு ஆசிரியரானதால் கைத்தொழில் மூலம் அடிப்படைக் கல்வித் திட்டத்தை விஸ்தரித்து அமைப்பதில் ஸ்ரீமதி ஆசாதேவிக்கு மிகவும் உதவியிருக்கிறார். நூல் நூற்பதை அடிப்படைக் கைத்தொழிலாக மதித்து, அவர் ஒரு புத்தகம் கூட எழுதியிருக்கிறார். அது முழுக்க முழுக்க அவருடைய சுய சிந்தனையிலிருந்து உருவான கொள்கை. நூல் நூற்பதை பரிகாசம் செய்பவர்களுக்குக்கூட, அது ஒரு நல்ல கைத்தொழில். அடிப்படைக் கல்வித் திட்டத்தில் அதை நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர் ருசுப்பித்துக் காட்டியிருக்கிறார். தக்ளியில் நூற்பதில் அவர் புரட்சியையே உண்டாக்கியிருக்கிறார். தக்ளியில் மறைந்திருக்கும் சக்திகளையெல்லாம் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார். பாரத நாட்டில் கையால் நூல் நூற்பதில் அவரைப் போல் பூர்ணத்துவம் எய்தியவர் யாருமே இல்லை.

அவருடைய உள்ளத்தில் தீண்டாமையின் வாசனை துளியும் இல்லை. வகுப்பு ஒற்றுமையில் எனக்கு இருக்குமளவு நம்பிக்கை அவருக்கும் உண்டு. இஸ்லாம் மதத்தின் தத்துவங்களை அறிவதற்காக அவர் ஒரு வருஷகாலம் குரான் ஷரீபை மூல அரபியில் பயின்றார். இதற்காக அவர் அரபி பாஷையும் கற்றுக் கொண்டார். தமக்குப் பக்கத்தில் வாழும் முஸ்லிம் சகோதரர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்கு இது அவசியம் என்று அவர் கருதினார்.

அவரிடம் சிஷ்யர்களும் தொண்டர்களும் அடங்கிய ஒரு கூட்டம் இருக்கிறது. அவர் ஒரு சமிக்ஞை செய்தால் போதும். எந்தவிதமான தியாகத்திற்கும் அவர்கள் தயார். ஓர் இளைஞன் குஷ்டரோகிகளின்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

முதல் சத்தியாக்கிரகி......

பணிக்குத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்திருக்கிறான். அவனை இந்தத் தொண்டுக்குத் தயார் செய்துவிட்ட பெருமை வினோபாவையே சாரும். நோய்களைப் பற்றி ஒன்றுமே தெரியாமலிருந்துங் கூட, தன் செயலில் அசையாத சிரத்தை கொண்டிருந்ததனால், குஷ்ட நோயைப் போக்கும் சிகிச்சையை அவன் நன்றாக அறிந்து கொண்டான். குஷ்டரோகிகளுக்குப் பணிவிடை செய்ய அவன் பல சிகிச்சைசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறான். அவனுடைய உழைப்பினால் நூற்றுக்கணக்கான குஷ்டரோகிகள் குணமடைந்திருக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு முன்பு குஷ்டரோகிகளின் சிகிச்சையைப்பற்றி அவன் மராத்தியில் ஒரு சிறு புத்தகம் எழுதியிருக்கிறான்.

வினோபா பல வருஷகாலம் வார்தாவில் மஹிளா ஆசிரமத்தையும் நடத்தி வந்தார். தரித்திர நாராயணர் சேவையில் அவருக்கு இருந்த பற்று, அவரை வார்தாவுக்கு அருகில் ஒரு கிராமத்துக்கு இழுத்துச் சென்றது. இப்போது அவர் வார்தாவுக்கு ஐந்து மைல் தூரத்தில் பவனார் என்ற ஊரில் போய்த் தங்கியிருக்கிறார். அங்கிருந்து அவர் தம்முடைய சிஷ்யர்களின் மூலமாக கிராமத்தாரோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார். பாரத நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் அவசியம் என்று அவர் கருதுகிறார். அவர் எந்தப் பக்கத்திலும் சாராமல் நடுநிலையில் நிற்கும் சரித்திரப் புலவர். நிர்மாணத்திட்டப்படி வேலை செய்தாலொழிய கிராமத்தாருக்கு உண்மையான சுதந்திரம் கிடையாது. நிர்மாண திட்டத்துக்கு மையமாக விளங்குவது கதர் என்பது அவர் நம்பிக்கை. 'அஹிம்சைக்கு மிகவும் பயன்படக்கூடிய வெளிச்சின்னம் சர்க்கா' என்பது அவர் நம்பிக்கை. அவருடைய வாழ்க்கைக்கு அது ஓர் அங்கமாகவே அமைந்துவிட்டது. முந்திய சத்தியாக்கிரகப் போர்களில் அவர் தீவிரமாக ஈடுபட்டவர். அரசியல் மேடையில் ஜனங்கள் முன்னால் பேச்சாளராக ஒரு பொழுதும் வந்ததேயில்லை. மற்றும் பலரைப்போல் அவரும் அரசியல் பிரசங்கங்கள் ஏற்கனவே வெள்ளமாகப் பாயும் இடத்துக்குப் போய் மேலும் பிரசங்கங்கள் செய்வதைக் காட்டிலும் அமைதியாக நிர்மாண வேலைகளில் முனைவது சட்டமறுப்பு இயக்கத்துக்கு அதிகத் துணை செய்வதாகும் என்று கருதுகிறார். சர்க்காவில் உள்ளூர சிரத்தை கொண்டு நிர்மாண வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டாலொழிய அஹிம்சை முறையில் எதிர்ப்பு சாத்தியமல்ல என்பது அவருடைய பூரணமான நம்பிக்கை.

யுத்தம் என்றாலே அதை எதிர்ப்பவர் வினோபா. ஆனால் அவர் தமது அந்தராத்மாவுக்கு மதிப்பு செலுத்துவது போலவே யுத்தம் என்றாலே எதிர்ப்பவர்களல்லவாயினும், இப்போது நடைபெறும் யுத்தத்தில் கலந்து கொள்ளத் தங்கள் அந்தராத்மா அனுமதிக்கவில்லை என்ற நிலையில் உள்ளவர்களின் அந்தராத்மாவுக்கும் மதிப்புச் செலுத்துகிறார். இந்த இரண்டு கூட்டத்துக்குமே வினோபா பிரதிநிதியாக இருந்த போதிலுங்கூட, இப்போதைய இந்த யுத்தத்தை மட்டுமே எதிர்க்கும் கூட்டத்துக்குத் தனிப்பிரதிநிதியாக இன்னும் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் எனக்கு நேரலாம்.

சேவாகிராமம்

அக்டோபர் 1940

## மகாத்மா காந்தியின் சாதனை வெற்றி அளிக்க உதவிய வித்துக்களிற் சில.....

உண்மையை உள சுத்தியுடன் உரைத்து வந்தமை

அன்பு என்னும் அருங்குணம்

கடலினும் பெரிதாகிய பொறுமையைக் கைக்கொண்டு பூமியில் சிறந்து விளங்கியமை

செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்து அதனை ஒழுகி வந்தமை

கடமை எவற்றிலும் பெரிது என எண்ணியமை

விடாமுயற்சி சகல செல்வங்களையும் தரும் என எண்ணியமை

செய்யும் தொழிலை உடனுக்குடன் செய்யுங்கள் என்றார்

புண்ணியம் செய்யுங்கள் பாவத்தை தவிருங்கள் என்றார்

தீமை செய்தவருக்கும் நன்மை செய்து வாழ்ந்து காட்டினார்

உயர்வு தரும் விடயங்களை நினை அது எப்போதும் உனக்கு சுகம் தரும் என்றார்

சாத்வீகத்தை வளர்க்க பாடுபட்டார்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் ஆன்றோர் அமுதமொழியினை போற்றி வந்தார்

கருங்காலி கட்டையைப் பிளக்கும் கோடரி வாழைத்தண்டைப் பிளக்க உதவாது என்பதையும் நன்கு உணர்த்தி வந்தார்.

தெய்வம் நமக்கு துணை என்பதில் திடமாக நம்பிக்கை வைத்திருந்தார்

பஜனை மூலம் மனஅமைதியையும் இறைவனின் கருணையையும் பெற இயலும் எனத் திடமாக நம்பி வந்தார்.

இயற்கை சிகிச்சையை மனமார வரவேற்றார்

செயல் மூலம் கல்வியை கற்பீரென்றார்

உடம்பிருக்கும் போதே தவம், தானம், அறம் என்பவற்றை செய்யுங்கள் என வழிகாட்டிச் சென்றார்

வாய் நல்லதானால் ஊர் நல்லதாகும் என்றும் கிணறு தூருவதும் அதனுடைய வாயினால் தான் என்றும் எடுத்துக் காட்டி நாவை அடக்கி அளந்து சொற்களை வழங்கி ஆன்ம சுகம் பெறுங்கள் என்றும் இயம்பினார்

"வாழ்க காந்தீயம்" "வளர்க காந்தி புகழ்"

**ஆக்கம் : கரவை கிழக்கு க.சி.சண்முகம்.**
ஓய்வு பெற்ற அதிபர்
பால்பண்டிதர்.

### படிப்பினை

குற்றமொன்று நாம் செயினும் காந்தியைப் போல்
கூசாமல் மன்னிப்புக் கோர வேண்டும்
மற்றவர்கள் பெரும் தவறு செய்திட்டாலும்
மன்னித்துக் காந்தியைப் போல் மறக்க வேண்டும்
உற்றவர்கள் பிழையெனினும் ஒளித்திடாமல்
ஓரமின்றி காந்தியைப் போல் உண்மை காட்டி
சற்றுமவர் துன்பமுறா சலுகை பேசி
சரிப்படுத்தும் காந்தியைப் போல் சகிப்பு வேண்டும். (நாமக்கல் கவிஞர் அவர்களின் "காந்தி அஞ்சலி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

(தொடரும்)

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 139, ஆகஸ்ட் - செம்ரெம்பர் - 2008

## சமுதாயப் புரட்சி

இன, மத வர்க்க, சாதி பேதங்களால் மனித சமுதாயம் பிளவுண்டு காணப்படுவதோடு அவ்வப்போது இந்த உணர்வுகள் மேலோங்கி மோதலுக்கும் இட்டுச் செல்கிறது. அதிகாரம், ஆணவம் போன்ற குணங்கள் மனிதனை மிருகமாக்கி விடுவதனால் இந்நிலை தோன்றுகிறது. ஆட்சி அதிகாரத்திலுள்ளோர் ஏனையோரை அடக்கி, ஒடுக்கி அடிமைகளாக நடத்துகின்றனர். இவர்கள் கொண்டிருக்கக் கூடிய படை பலத்திற்கும், ஆயுத பலத்திற்கும் முன்னால் மனித நீதி செத்துவிடுகிறது. இது உலகெங்கும் காணக்கூடிய ஒரு நிலையாகும். உலக சமாதானம் பற்றிக் குறிப்பிடுகையில், வல்லரசுகள் ஆயுத ஒழிப்புச் செய்ய தைரியமாக முன்வந்தாலொழிய சமாதானம் கிட்டப்போவதில்லை என்கிறார் மகாத்மாகாந்தி.

நாம் மேலே குறிப்பிட்ட பேதங்களை வெறியாக்குவதன் மூலம் மக்களின் உணர்வுகளைத் தூண்டி தமது கதிரைகளையும் பதவிகளையும் அதிகாரத்திலுள்ளோர் தக்கவைத்துக் கொள்கின்றனர். முதலாளித்துவ ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு இனவாதம், மதவாதம், சாதிவாதம் என்பன முக்கிய தூண்களாக விளங்கி வருகின்றன. இது நாடுகளுக்கு மட்டுமல்ல சமூகங்களுக்கும் பொதுவான ஒன்றாகும். “இனவாதமற்ற முதலாளித்துவம் இல்லை” என்ற அமெரிக்க கறுப்பின விடுதலைப் போராளியான மெல்கம் எக்ஸின் கூற்று இங்கு கவனிக்கத்தக்கது இந்த வேற்றுமைகளை தனது மூலதனமாக்கிய முதலாளி வர்க்கம் சாமர்த்தியமான முறையில் தனது ஏகாதிபத்திய உலகமயமாக்கல் வேலைத்திட்டத்தின் நிகழ்ச்சி நிரலை நகர்த்தி வருகிறது. இதனால் அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கமும் ஏழை மக்களும் காலங்காலமாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். வருகின்றனர்.

பல்தேசியக் கம்பனிகள் ஏழை நாடுகளின் மக்களை தமது நிரந்தர வாடிக்கையாளர்களாக மாற்றிவிட்டுள்ளன. இதனால் அதிநவீன விஞ்ஞான வளர்ச்சி தந்திருக்கும் மாய உலகில் அன்னிய மோகத்திலும் விதேசிய கலாசாரத்திலும் வயது வேறுபாடின்றி அமிழ்ந்துவரும் ஏழை நாடுகளின் குடிமக்கள் தமது வாழ்வையும் வளத்தையும் தம்மையறியாமலே இழந்து வருகின்றனர்.

இந்த துர்ப்பாக்கிய நிலைகளைத் தடுக்க வேண்டுமானால் முதலில் மக்கள் விழிப்படைய வேண்டும். ஏழைகளின் வாழ்வு மலர்வதற்கு சமுதாயப்புரட்சி காண வேண்டியது அவசியமானது. ஏற்றத் தாழ்வுகள் அற்ற சமத்துவம், சுதந்திரம் உள்ள சமதர்ம மனித வர்க்கத்தை காணுதலே சமுதாயப் புரட்சி ஆகும். இந்த சமுதாயப் புரட்சி மூலம் உருவாகும் சமூகத்தினையே மகாத்மாகாந்தி அடிகளின் பிரதான சீரான ஆச்சார்ய வினோபாபாவே சர்வோதயம் என்கிறார். வாழ்வில் மட்டுமல்ல எமது எண்ணத்திலும் மறுமலர்ச்சி தோன்ற வேண்டும். இந்த மறுமலர்ச்சி சகல நிலையிலும் சமுதாயப் புரட்சிக்கு வித்திடட்டும்.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

## காந்தீயம் வாசகர் வட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான “காந்தீயம்” பத்திரிகையின் அறிமுகமும் வாசகர் வட்டம் உருவாக்கும் நிகழ்வும் ஜூன் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லத்தில் நடைபெற்றன.

இல்லப் பொறுப்பாளர் செந்தூரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவர் தேசபந்து வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன், தேசபந்து டாக்டர் ஆ.அரசக்கோன், வே.பொ.மாணிக்கவாசகர் ஆகியோர் கலந்து கொண்டனர். வரவேற்புரையை பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.நாகரத்தினம் நிகழ்த்தினார். அறிமுக உரையை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினரும் ‘காந்தீயம்’ ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி வழங்கினார். இறுதியில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இல்ல மாணவர்கள் கருத்துப் பகிர்வை மேற்கொண்டனர்.

## திருமலை நாயகி



இந்திய மண்ணில் கஸ்தூரிபாய் நாயகி
இலங்கையில் வாழ்ந்தவர் திருமலை நாயகி
காந்தி ஐயாவைக் கைப்பிடித்த நாயகி
காலம் உணர்ந்து கடமை செய் நாயகி
சாந்தி சமாதானச் சாதனை நாயகி
சாதி பேதத்தையும் சாடிய நாயகி
தீந்தமிழ் கற்பித்த தெய்வீக நாயகி
திருமதி கந்தையா இராச நாயகியே

அதி உயர்ந்தோர்களை ஆக்கிய நாயகி
ஆசிரியப்பணி ஆற்றிய நாயகி
பதிவிர தத்திலே பற்றுள்ள நாயகி
பாதகச் செயலேதும் பாராத நாயகி
மதிநல மாண்புடன் மகிழ்வுற்ற நாயகி
மாற்றலர் தம்மையும் மதித்திட்ட நாயகி
தீதின்றி நல்லதைச் சிந்தித்த நாயகி
திருமதி கந்தையா இராச நாயகியே

ஆண்டவன் படைத்த அன்னையாம் நாயகி
அற்றவர்க் காறுதல் அளித்திட்ட நாயகி
வேண்டுதல் பிறர்க்காய் செய்திட்ட நாயகி
வேணவாக் கொள்ளாத வித்தக நாயகி
மாண்டனள் என்ற மரபில்லா நாயகி
மக்கள் மனமெல்லாம் குடிகொண்ட நாயகி
தீண்டுதல் இல்லாத் திருமகள் நாயகி
திருமதி கந்தையா இராச நாயகியே.

ஆ.வடிவேலு
ஓய்வு பெற்ற அதிபர்
தும்பளை
பருத்தித்துறை

# வறியவர்களுக்கு வாழ்வளிக்கும் மருந்து

றஸ்மினா காலிதீன்
முதலியார்குளம் - செட்டிகுளம்.

காந்தியடிகள் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த உத்தமர்களுள் ஒருவர். இவர் வடஇந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். பெற்றோர் இவருக்கு மோகனதாஸ் காந்தி என்று பெயரிட்டனர். காந்தி என்பது அவரது குடும்பப் பெயராகும்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை உள்ளூரிலேயே பெற்றுக் கொண்டார். இவர் தனது இளம் பிராயத்தில் அரிச்சந்திரன் நாடகம், சிரவணன் நாடகம் போன்றவற்றை பார்த்து நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிப்பவராக விளங்கினார். இப்பிராயத்திலேயே இவருக்கு அக்கால வழக்கப்படி பெற்றோர் கஸ்தூரிபாயைத் திருமணம் செய்து வைத்தனர்.

மோகனதாஸ் காந்தி சட்டக் கல்வி கற்பதற்காக இங்கிலாந்து சென்ற போது இவரது தாயார் இவருக்குப் பல அறிவுரைகளைக் கூறினார். அவற்றுள் "மது அருந்தாதே", "பொய் சொல்லாதே" என்பன முக்கியமானவையாகும். இவ்வறிவுரைகளை மனதிற் கொண்டு வாழ்ந்தார். மூன்றாண்டுகள் முயன்று கற்று "பாரிஸ்டர்" பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பினார்.

சிறிது காலம் இந்தியாவில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். அப்பொழுது ஒரு வழக்குத் தொடர்பாக தென்னாபிரிக்காவிற்குச் சென்றார். தென்னாபிரிக்காவில் வாழ்ந்து வந்த இந்தியர்களை வெள்ளையர்களும் வெள்ளையர் அரசாங்கமும் தாழ்வாக நடத்தியதைக் கண்டு வேதனைப்பட்டார். அவர்களது துன்பங்களைப் போக்கவிழைந்தார். சத்தியாக்கிரக வழியில் நின்று துயர் துடைக்க முனைந்தார். அதில் வெற்றியும் கண்டார்.

அதன் பின்னர் இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது இந்தியா அந்நியருக்கு அடிமைப்பட்டு தாழ்வுற்று இருந்தது. இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பலர் உழைத்தனர். காந்தியடிகளும் அவர்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார். பலமுறை சிறை சென்றார். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்த திடசங்கற்பம் கொண்டார். இவரது பெற்றோர் பெருஞ் செல்வந்தர்களாக இருந்த போதும் இவர் கைராட்டினம் கொண்டு நெய்யப்பட்டகதர் உடைகளை அணிந்து எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தார்.

அஹிம்சை ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை உணர்ந்து அன்பு வழியில் நின்று நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 திகதி இந்திய சுதந்திரக்கொடி ஏற்றப்பட்டது.

காந்தியடிகள் எழுதிய "சத்திய சோதனை" அவரது சுயசரிதையாகும். இந்நூல் மூலமாக இவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளலாம். இவர் கடைப்பிடித்த கொள்கைகளையும் அறியலாம். சத்தியத்தில் இவருக்குக் கூடிய ஈடுபாடு இருந்தது. இவர் சத்தியமே கடவுள் என்று வாழ்ந்து காட்டியவர் ஆவார். சமூகத்தில் இருந்து கொண்டு சமூக சேவை செய்தலை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டிருந்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள் ஆவார். அநீதி, குற்றம் இழைத்தவர்களுக்குக்கூட நாம் தீங்கு செய்யக்கூடாது, பாவத்தை வெறுக்கலாம். ஆனால் பாவம் செய்தவனை ஒரு பொழுதும் வெறுக்கக் கூடாது" என்பது இவர் போதனையாக இருந்தது. இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் மகான் ஆவார். இவரைப் பாரத நாடு மட்டுமன்றி முழுஉலகமுமே போற்றுகின்றது. இவர் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவரின் பெயரால் பாரதத்திலும் இலங்கையிலும் இயங்கி வரும் சேவை நிலையங்கள் இன்றும் இவருடைய பணிகளை நினைவுறுத்துகின்றன.

# பாரதியார்

நினைவு தினம் செப்ரெம்பர் 11



எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்.
- பாரதியார்.

கவிதைகளினால் விடுதலை வித்தைத் தூவியவர். விடுதலைத் தீயை இந்திய தேசமெங்கும் வளர்ப்பது என்பதிலேயே கண்ணும் கருத்துமாக விளங்கியவர். இந்திய விடுதலையே இவர் தம் மூச்சாகக் கொண்டவர். சமூக சீர்திருத்தக் கருத்துக்களை சொல்மாலையாக அளித்தவர். தேசிய உணர்வை, சமூகப் பிரஞ்ஞையை பாடல்களில் வலியுறுத்தியவர். உலகில் புதுமைப் பெண்கள் தோன்றக் காரணமாக அமைந்த பெண் சுதந்திரத்தைப் பாடியவர். புதிய புதிய நெறிகளை உலகிற்கு உணர்த்திய பெருந்தகையாளர். புதுக்கவிதையின் முன்னோடி வீரமில்லாத கோழைகளையும் கவிதையால் வீரர்களாக மாற்றியவர். சிறந்த பத்திரிகையாளர் சிறந்த மக்கள் கவிஞர்.

# ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

"காந்தீயம்" பத்திரிகை தொடர்பான உங்களின் கருத்துக்கள் மற்றும் காந்திய நோக்கிலான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அவற்றின் பொருத்தப்பாடு, தரம் என்பவற்றின் அடிப்படையில் அவை பிரசுரிக்கப்படும்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினதும் "காந்தீயம்" பத்திரிகையினதும் 60வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு ஆண்டு மலர் ஒன்றினை வெளியிட எண்ணியுள்ளோம். சங்கத்தின் கடந்த காலப் பணிகளில் ஈடுபட்டும் அவை பற்றிய செய்திகளை தெரிந்தும் வைத்துள்ள பெரியோரிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம். மேலும் சங்கத்தின் வெளியீடுகள், புகைப்படங்கள் போன்ற ஆவணங்களை சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அனுப்பி உதவினால் எமது பணிக்குப் பேருதவியாக இருக்கும்.

தொடர்புகளுக்கு:

**ஆசிரியர்**
**"காந்தீயம்"**
**வாணி கணனிப்பதிப்பகம்**
**இல.61B, 1ம் குறுக்குத்தெரு,**
**வவுனியா.**

## சாவைத்தீர்மானிப்பது கடவுளா? மனிதனா?

ஒரு சமயம் காந்தி அடிகள் சில தலைவர்களுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது காந்தி அடிகளைக் குறிவைத்து யாரோ ஒருவன் துப்பாக்கியால் சுட்டிருக்கிறான். குறி தவறியதால் அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை. காரில் இருந்தவர்கள் காரை வேகமாகச் செலுத்தச் சொல்லியுள்ளார்கள். ஆனால் காந்தி அடிகளோ காரை நிறுத்தச் சொன்னார். சாரதி காரை நிறுத்தியவுடன் காந்தி அடிகள் இறங்கி சர்வ சாதாரணமாக நடக்க ஆரம்பித்து விட்டார். எல்லோரும் செய்வதறியாது தவிக்கையில் காந்தி அடிகள், "எவ்வளவு காலத்திற்கு நான் இருக்க வேண்டும் என்று இறைவன் நினைக்கின்றானோ, அவ்வளவு காலம் இருந்தே தீருவேன். என்னைக் கருவியாகக் கொண்டு சில காரியங்களை நடத்திவரும் கடவுள் அவை பூர்த்தியாகும் முன் என்னை அழைத்துக் கொள்ளமாட்டார்" என்றார்.

நன்றி: "மன்னா" 2007 நவம்பர்

## எண்ணமும் எழுத்தும்

உண்பதுவும் உடுப்பதுவும் உறங்குவதும் வாழ்க்கை ஆகாது. மனிதன் சமூகத்தில் வாழவேண்டுமென்றால் தொடர்பாடல் நிச்சயம் தேவை. எம்மத்தியில் நல்ல எண்ணங்களைக் கொண்ட மக்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் அவற்றை எழுதுவதில்லை. அதனால் அவர்கள் வாழ்வு மதிப்பற்றதாக மாறி விடுகிறது. எனவே நல்ல எண்ணங்கள் தோன்றும் போது அவற்றை எழுதி வைத்து யார் யாருக்கு அது தேவை என்பதைச் சிந்தித்து அவற்றை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

நாம் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த இந்தியாவின் தேசபிதா வாழ்ந்த வழியைச் சிந்திக்கின்றோம். அவரது எண்ணங்கள் எமக்கு எப்படிக் கிடைத்தது. அவரது வாழ்க்கை சரிதமாக எழுதப்பட்டு பல பேர்களின் கைகளிலே தவழ்ந்து இன்று எமது கைகளில் நிற்கிறது. நாம் எதிர்காலத்தைத் திட்டமிடும் போது இறந்தகாலம் எமக்குத் தேவையாகிறது. புதிதாக ஒரு யோசனையை சரித்திரம் தெரியாதவன் நடைமுறைப்படுத்த முடியாது. சுலோகங்களாகவோ பிரசுரங்களாகவோ கையெழுத்துப் பிரதிகளாகவோ மாறும் எண்ணங்கள் பின் புத்தக வடிவைத்தாங்கும் தகுதியைப் பெறுகின்றன. நல்லெண்ணம் நிறைந்த அன்பர்கள் யாவரும் அவற்றை நடைமுறைப்படுத்த நிச்சயம் எழுத ஆரம்பிக்க வேண்டும். காந்தீய வாசகர்களுக்கு இந்தச் சிந்தனையைப் படையல் செய்கிறேன்.

சி.ஜெயகணேஷன் (ஆசிரியர்)
சாவகச்சேரி.

## என்ன செய்யலாம் தம்பி?

காந்தி போல் நடந்து பார் தம்பி - அவர்
கழல் மலர் உச்சியில் வைத்துப்பார் தம்பி
சாந்திபெற் றுய்யலாம் தம்பி - நல்ல
சால்பினில் நீயுமே சாதிப்பாய் தம்பி
ஏந்திக் கை நீட்டாதே தம்பி - எங்கள்
இதயத்தில் கடவுளை வைத்தேத்து தம்பி
ஈந்திடும் நிலபுலம் நம்பி - நீ
எல்லாப் பயிர்களுஞ் செய்து பார் தம்பி

இலமென்று சோம்பிநா மிருந்தால் - எங்கள்
இருக்கிற நிலபுலம் சிரிக்குமே தம்பி
தலமெல்லாம் வாழ்ந்திடத் தம்பி - எங்கள்
தங்க நிலங்களைச் சார்ந்து செய் தம்பி
பலகலை கற்றுமென் தம்பி - எங்கள்
பண்டைய பண்பை மறக்காதே தம்பி
வலமாக வள்ளிகள் நட்டு - வயிற்றை
வற்றாமல் பார்த்திரு வழக்கமாய்த் தம்பி

உணவினை ஆக்கியுண் தம்பி - எங்கள்
உடையையும் நெய்திங்கே உடுத்திடாய் தம்பி
பணமதை சேகரி தம்பி - வீணே
பாழாக பிறநாட்டுக் கனுப்பாதே தம்பி
குணமாக முன்னோரைப் போல - ஒன்றாய்க்
கூடித் தொழில் செய்து கொண்டாடு தம்பி
மனமொன்றி வாழடா தம்பி - அந்த
மகாத்மாவை எந்நாளும் மதித்துவாழ் தம்பி.

பனை தென்னை கமுகுகள் நட்டு
அதன் பயன் பெற்று சுகமாக வாழடா தம்பி
மனைதனில் மாடாடு வளர்த்து - இந்த
மாநிலம் போற்றிட வாழ்வாயென் தம்பி
தினை சாமை குரக்கன் முதலாம் - எல்லாச்
சிறுதானியம் நட்டு சேமமாய் வாழ்ந்து
இனசனம் போற்ற வாழ் தம்பி - நன்கு
ஏற்றமாய்க் கல்வி பயிலடா தம்பி

இத்தனை வயதாக வளர்ந்தும் - மண்ணில்
எத்தனை மரம் நட்டாய் தம்பி
பத்தி பத்தி யாய் நிற்கும் பெரிய
பருமரம் காசாக்க தறித்திட்டாய் தம்பி
நித்தமும் சும்மா யிருந்து - இங்கே
நியாயமில் லாமலே அலைகிறாய் தம்பி
உத்தமர் காந்தி வழியைப் பற்றி
ஓயாமல் கைக்கொண்டு வாழ்ந்துபார் தம்பி.

தந்தை தாய் சகோதரரோடு - உன்னைச்
சார்ந்த மனை மக்கள் சுற்றத்தைப் பேணு
சொந்தமாய் உழுதுண்டு வாழ்வை - நல்ல
சுகமாக போற்றிவா சோராமல் தம்பி
அந்த நாள் நம்மவர்க் கெல்லாம் - இந்த
அநியாய நோயொன்றும் அணுகாது தம்பி
இந்த நாளும் அதைப் போன்று- நடந்தால்
எந்நோயும் வாராமல் இருக்கலாம் தம்பி.

காந்தி பக்தர்
முதுபெரும் புலவர், கலாபூஷணம்.
ஆசிரியர் வை.க.சிற்றம்பலம்

**காந்தீயம் பொது அறிவுக்களம் போட்டி இல 1 இன் முடிவுகள் அடுத்த இதழில் வெளிவரும். அடுத்த போட்டிக்காக ஆவலுடன் காத்திருங்கள்.**

(ஆ-ர்)

# காந்திஜியின் கல்விக் கருத்துகள்-ஆதாரக் கல்வி முறை

S.சந்தானம் (சென்னை)



இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியக் கல்வியின் வளர்ச்சி பற்றிய வரலாற்றில் நம் தேசத்தந்தை காந்திஜியின் (1869 - 1948) கல்விக் கருத்துகளும் இவற்றின் விளைவாக எழுந்த ஆதாரக்கல்வி முறையும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

தென்னாபிரிக்காவில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய நாளிலிருந்தே கல்வி முறை பற்றித் அவர் ஆராய்ந்து வந்திருந்தார். இதன் விளைவாகப் பயனுள்ள உண்மைக் கல்வி எத்தகையதாக இருத்தல் வேண்டும் என்பது பற்றித் தெளிவான பல எண்ணங்கள் அவரது உள்ளத்தில் எழுந்தன. இந்தியா போன்ற நாடுகளுக்குத் தேவைப்படுவது சிக்கனமானதும், நடைமுறைப் பயன் மிக உள்ளதுமான கல்வி முறையேயாகுமென்றும், கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும், அதனை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும் என்றும் காந்திஜி கருதினார். கல்வி எனப்படுவது குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய அதன் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயல் முறையாகும் என்பது இவரது விளக்கமாகும். உண்மைக் கல்வி வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும் கொண்டதாக அமையக்கூடாது என்றும், பயனுள்ள உடலுழைப்பு, செய்திறன்களின் வளர்ச்சி ஆகியன உண்மைக் கல்வியின் முக்கிய கூறுகளாகும் என்றும் காந்திஜி தமது வாழ்க்கை அனுபவங்களினின்றும் உணர்ந்திருந்தார். காந்திஜியின் கல்விக் கருத்துகள் உருவாவதற்கு ரஸ்கின் (Ruskin), டால்ஸ்டாய் (Tolsotoy) போன்றோரது நூல்களிலுள்ள வாழ்க்கைக் கருத்துகளும் உதவின. இப்பல்வேறு கல்விக் கொள்கைகளைக் கொண்டு 1937 ஆம் ஆண்டில் தமது ஆதாரக்கல்வி முறையினை அவர் நாட்டுக்கு அளித்தார். ஆதாரக்கல்வியினைக் குழந்தைகளுக்களுக்கான ஒரு புதிய கற்பித்தல் முறை என்பதைக் காட்டிலும், அதனைப் பள்ளியில் ஒரு புதிய அமைப்பினையும் சூழ்நிலையையும் உருவாக்கும் வழி எனல் பொருந்தும்.

காந்திய இலட்சியங்கள் என்று இன்று கல்வியாளர்களால் சில கருத்துகள் குறிப்பிடப்பட்டு, கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் இவை வலியுறுத்தப்பட வேண்டும் எனப்படுகிறது. சிந்தனை, சொல், செயல் ஆகிய யாவற்றிலும் வாய்மை (Truth) அகிம்சை, அச்சமின்மை, சுதந்திரம், மக்களாட்சியில் நம்பிக்கை, பல்வேறு பண்பாட்டினாரிடையே சகிப்புத்தன்மை, சமயச் சார்பற்ற அரசு, சமத்துவம், தற்சார்பு, தற்கட்டுப்பாடு, இலக்குகளை மட்டுமன்றி இவற்றை அடையும் வழிகளிலும் கவனம் செலுத்துதல், சுத்தம், எளிமை ஆகியன இவையாம். ஆதாரக்கல்வி இவ்விலட்சியங்களை வலியுறுத்துவதாகவும் உள்ளது.

காந்திஜி வெளியிட்ட ஆதாரக்கல்வி முறை பற்றி ஆராய்ந்து முடிவுகளை எடுக்க, பின்னர் இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களது தலைமையில் அப்போது ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆதாரக்கல்வி முறை பற்றிய நான்கு கொள்கைகளைக் குறிப்பிட்டது.

1. எல்லாக் குழந்தைகளுக்கும் 7 ஆண்டுகள் இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும்.
2. கல்வியில் தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும்.
3. கல்வித் திட்டம் ஒரு கைப்பணி போன்ற உற்பத்தித் தொழிலை மையமாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.
4. இக்கைப்பணியின் விளைவாக கல்விக்காகும் செலவில் ஒரு பகுதியேனும் ஈடுசெய்யப்பட வேண்டும் என்பன இவையாம்.

பின்னர் பி.ஜி.கெர் (B.G.Kher) என்பாரது தலைமையில் மத்தியக்கல்வி ஆலோசனைக் குழுவும் இம்முறையினை ஆராய்ந்து, இது ஒரு சிறந்த கல்வி முறை எனினும், இதனை உற்பத்தி முறையாகக் கருதுவது தவறு என்றும் கல்விக்காகும் செலவைக் கைப்பணி ஈடுசெய்து தான் ஆக வேண்டும் என்பதில்லை என்றும் குறிப்பிட்டது. ஆதாரக்கல்வியை அதற்கடுத்த கல்விக் கட்டத்தோடு இணைக்கும் முறை பற்றியும் இக்குழு ஆராய்ந்தது.

ஆதாரக்கல்வி முறையின் முக்கிய கருத்துகள்.

1. இலவசக்கட்டாயக் கல்வி எல்லாக் குழந்தைகளுக்கும் 7 ஆண்டுகளுக்கேனும் அளிக்கப்பட வேண்டும்.
2. தாய்மொழியே கற்பித்தலுக்கான சிறந்த பயிற்று மொழியாகும்.
3. தொடக்கப்பள்ளிக் கல்வியின் மையமாக ஒரு கைப்பணி, அமைய வேண்டும். இக்கைப்பணி பள்ளி அமைந்திருக்கும் சமூகச் சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதனுடன் இணைந்தே பிற பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.
4. ஆதாரப் பள்ளிகளில் பாடநூல் முக்கியத்துவம் பெறக்கூடாது. வெளியார் தேர்வு முறைக்கும் இப்பள்ளிகளில் இடம் கிடையாது. மாணாக்கரது அன்றாடப் பணிகளை ஆசிரியரே சீர்தூக்கி மதிப்பிட்டு அவர்களது முன்னேற்றத்தை அளவிட

(7ம் பக்கம் பார்க்க)

**காந்திஜியின் கல்விக்........**

வேண்டும்.

5. சுத்தம், சுகாதாரம், குடிமைப் பயிற்சி, வேலை, துதித்தல், விளையாட்டு, பொழுதுபோக்குச் செயல்கள் ஆகியன யாவுமே ஆதாரப்பள்ளிகளில் சிறப்பிடம் பெற வேண்டும்.

ஆதாரக் கல்வி முறைக்கு இப்பெயர் பொருத்தமானதாகவே உள்ளது. இக்கல்வி முறை நமது இந்தியப் பண்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு எழுந்தது. குழந்தையின் ஆதார அல்லது அடிப்படை வளர்ச்சித் தேவைகளையும், கல்வித் தேவைகளையும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. கல்வியின் அடிப்படை நிலையான தொடக்கக் கல்வி நிலைக்குப் பொருத்தமானது. மேலும் உணவு, உடை போன்ற மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை மையமாகக் கொண்டு குழந்தைக்குக் கல்வி கற்பிக்க முயலுகிறது. ஆதாரக் கல்வித் தத்துவத்தில் வாழ்க்கையோடு இணைந்த கல்வி,செய்து கற்றல், வேலையூடே கல்வி போன்ற சிறந்த கல்விக் கருத்துகள் காணப்படுகின்றன. பள்ளி ஒரு சமுதாயமாகச் செயற்படுவதன் விளைவாக மக்களிடையே காணப்படும் குறுகிய மனப்பான்மைகள் மறைந்தொழிய இம்முறை வழிசெய்கிறது. இவ்வாறு வாழ்ந்து கற்றல், பள்ளியையும் சமுதாயத்தையும் இணைத்துச் சிறந்த குடிமைப் பயிற்சியாகவும் அமைகிறது. ஆதாரக்கல்வி முறை செயற்படுகையில் நடைமுறையில் பல குறைபாடுகள் எழுந்தன. இவற்றை நீக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆதாரக்கல்வி முறையின் வெற்றிக்கு அடிப்படை, அதன் தத்துவங்களில் முழு நம்பிக்கையோடு உற்சாகத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் பள்ளிகளுக்குப் போதிய எண்ணிக்கையில் கிடைப்பதைப் பொறுத்தே அமைவதாகும். ஆனால் இத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகிறது. ஆதாரக்கல்வியின் வளர்ச்சியில் பல காரணிகள் குறுக்கிட்டு வந்துள்ளன. இக்கல்வி பற்றிய முழுமையான உணர்வினைப் பலர் பெறவில்லை. சமுதாயத்தினரது மனப்பான்மை பலபோது இதற்கு ஆதரவாகக் காணப்படவில்லை.

நிதி வசதி வேண்டுமளவு ஒதுக்கப்படவில்லை. ஆர்வம் மிக்க ஆசிரியர்கள், போதிய பாடநூல்கள் ஆகியன குறைந்து காணப்பட்டன. ஆங்கிலம் முழுமையாக புறக்கணிக்கப்படுதல், கைப்பணி அதிகஅளவு வலியுறுத்தப்படல், தவறான இணைப்புமுறை போன்றனவும் வளர்ச்சியைப் பாதித்தன. டாக்டர் கொத்தாரியின் கல்விக் குழு ஆதாரக் கல்வியினைத் தனிப்பட்ட ஒரு கல்வி நிலை எனக் கருதத் தேவையில்லை என்றும், ஆதாரக்கல்வியின் அடிப்படைக் கருத்துக்கள் கல்வியின் எல்லா நிலைகளிலுமே ஊடுருவிச் செயற்பட வேண்டும் என்றும், எல்லா மாணாக்கர்களுக்கும் வேலை அனுபவங்கள் (Work Experiences) அளிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதை இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

நன்றி: **வளரும் இந்தியாவில் கல்வியும் கல்வி மேலாண்மையும்.**

---

**இலங்கைத் தீவுக்கோர்.......**

இலங்கை சென்று சொந்தக் கிராமமான வட்டுக்கோட்டைக்குச் சென்றார். எந்த கிராமத்தில் பிறந்து தனது வாழ்க்கைப் பயணத்தை தொடங்கினாரோ அதே கிராமத்தில் திரு.அரியநாயகம் அவர்கள் மரணமடைந்தார். அவரது உடல் எரியூட்டப்பட்டு அஸ்தியைக் கையில் எடுத்துக் கொண்டு திருமதி.ஆஷா தேவி அவர்கள் சென்னை விமான நிலையத்திற்கு வந்த போது மகரிஷி அருணாசலம் அவர்கள், திரு.எஸ்.ஆர்.சுப்பிரமணியம், திரு.சிவராமகிருஷ்ணன், க.ரா.கந்தசாமி ஆகியோருடன் நானும் விமான நிலையத்திற்குச் சென்று அவருக்கு ஆறுதல் கூறி மயிலாப்பூரில் உள்ள காந்தி மன்றக் கட்டிடத்தில் காந்தி அன்பர்கள் கூடி அஞ்சலி செலுத்தினோம்.

இலங்கைத் தமிழர்களுக்கும் காந்தி அடிகளுக்கும் ஆழமான ஆன்மீகத் தொடர்பு இருந்தது என்பதைக் குறிப்பிடுவதற்காகவே இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறேன்.

திரு.பேரின்பநாயகம் அவர்கள் 28.7.1927 அன்று காந்தியடிகளுக்கு எழுதிய கடிதத்தில் "இலங்கை மக்களாகிய நாங்கள் கதர் வேலைக்காக குறைந்தபட்சம் 30000 ரூபாய் வசூலித்து தங்களுக்கு நன்கொடையாக அளிக்க திட்டமிட்டுள்ளோம். ஆகவே தாங்கள் தயவுசெய்து இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டும் என அழைப்பு விடுக்கிறோம். தங்கள் வருகையை இலங்கை நாட்டின் அனைத்து தரப்பு மக்களும் எதிர்பார்க்கிறார்கள்" என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பேரின்பநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள "யாழ்ப்பாண கல்லூரி"யில் பயின்றவர். யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்ற அமைப்பை 1924ஆம் ஆண்டிலேயே துவக்கினார். அவ்வாறு துவக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தனது படிப்பை முடித்தவுடன் அக்கல்லூரியிலேயே ஆசிரியர் பணிபுரிந்தார். ஆசிரியராகப் பணிபுரிந்த நிலையிலேயே பேரின்பநாயகம் அவர்கள் காந்தியடிகளை இலங்கைக்கு வருமாறு அழைத்திருந்தார்.

திரு.பேரின்பநாயகம் அவர்கள் காந்தியடிகளை இலங்கைக்கு அழைப்பதற்கு முன்பாகவே மிகவும் பிரபலமான புத்தமத ஞானி அனகாரிக தர்மபால என்பவர் 7.2.1924ஆம் தேதியிட்டு அனுப்பிய தந்தி மூலம் காந்தியடிகளையும் மற்றும் அவரது குடும்பத்தினரையும் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அனகாரிகதர்மபால அவர்கள் மிகச் சிறந்த புத்தமத ஞானியாவார். அமெரிக்க நாட்டிலுள்ள சிகாகோ நகரத்தில் நடைபெற்ற சர்வசமய மாநாட்டில் புத்தமத பிரதிநிதியாக அனகாரிக தர்மபாலா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில் தான் இந்து மதத்தின் சார்பாக சுவாமி விவேகானந்தர் கலந்து கொண்டு உரையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சுவாமி விவேகானந்தருடைய ஆற்றல் மிக்க சொற்பொழிவு உலக மதத்தலைவர்களிடையே இந்து மதத்தைப் பற்றிய ஒரு உயர்ந்த எண்ணத்தை ஏற்படுத்தியது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். அதே போன்று தான் அனகாரிக தர்மபால அவர்கள் சிகாகோ நகரில் புத்தமதம் பற்றி ஆற்றிய சொற்பொழிவும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும்.

(தொடரும்...)

# இலங்கைத் தீவுக்கோர் காந்தியப் பாலம்




முனைவர் மு.மாரியப்பன்

"சர்வோதயம் மலர்கிறது" இதழின் பதிப்பாசிரியரும் சர்வோதய இலக்கியப் பண்ணையின் தலைவருமான முனைவர் மு.மாரியப்பன் அவர்கள் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ல் இலங்கை வருகை தந்திருந்தார். இந்த விஜயத்தின் போது அவரின் மனைவி மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக காந்திய தத்துவத்துறைப் பேராசிரியர் ஆண்டியப்பன், காந்தி கிராம பல்கலைக்கழக காந்திய தத்துவத்துறைப் பேராசிரியர் நாராயணசாமி ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

மாரியப்பன் அவர்கள் தெற்கில் "சர்வோதயம்" அமைப்பின் நிகழ்வுகளில் கலந்து விட்டு இந்தியா திரும்பிய பின் தனது இலங்கைப் பயண அனுபவத்தை "சர்வோதயம் மலர்கிறது" இதழில் விரிவாக எழுதியிருந்தார். அந்த நீண்ட கட்டுரையில் இலங்கையில் காந்திய அமைப்புக்களின் தோற்றம், வளர்ச்சி, செயற்பாடு பற்றி அவர் விரிவாக ஆராய்ந்துள்ளார். அக்கட்டுரையில் இடம் பெறும் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் பற்றிய அவரின் பார்வை இங்கே நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

(ஆ-ர்)



### காந்தியடிகளின் இலங்கை விஜயம்

இலங்கை நாட்டில் பொதுவாக காந்திய சர்வோதயக் கருத்துக்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தாலும் தமிழர்கள் பெரும்பான்மையினராக இருக்கும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இக்கருத்துக்கள் சென்றடைவதற்குத் தடையாக அந்நாட்டில் நடைபெற்றுவரும் இனப்போர் காரணமாக அமைந்துவிட்டது. எனினும் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகளில் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் என்ற ஒரு அமைப்பு இன்றளவும் செயல்பட்டு வருகிறது. இச்சமயத்தில் 1927 ஆம் ஆண்டு நம் தேசப்பிதா காந்தியடிகள் ஒரு வாரகாலம் இலங்கை நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தார் என்ற செய்தியை நாம் நினைவு கூர வேண்டும். 1921 இல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பின்னர் 1930 ஆம் ஆண்டில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்திற்கும் இடைப்பட்ட 10 ஆண்டு காலத்தில் காந்தியடிகள் நிர்மாணத் திட்டங்களைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தார். அதில் முக்கியமாக கதர்ப் பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அச்சமயத்தில் இலங்கை நாட்டிற்கும் சுற்றுப் பயணமாக வருமாறு காந்தியடிகளுக்கு அழைப்பு விடப்பட்டது. இவ்வழைப்பினை யாழ்ப்பாணத்திலுள்ள வட்டுக்கோட்டையைச் சார்ந்த ஹாண்டி பேரின்பநாயகம் என்னும் தமிழர் விடுத்தார் என்பது நமக்கெல்லாம் பெருமை அளிக்கும் செய்தியாகும்.

இத்தருணத்தில் இதே ஊரைச் சேர்ந்த காந்தியக் கல்வி நிபுணர் திரு.இ.டபிள்யூ அரியநாயகம் அவர்களை நாம் நினைவு கூர வேண்டும். திரு.அரியநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத் தமிழர். கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர். இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். பின்னர் கவியரசர் ரவிந்திரநாத்தாகூர் நிறுவிய சாந்தி நிகேதனத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். ரவிந்திரநாத் தாகூர் அரியநாயகம் அவர்களை காந்தியடிகளுடன் பணிபுரியுமாறு சபர்மதி ஆஸ்ரமத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களுடன் இணைந்து காந்தியடிகள் வகுத்துக் கொடுத்த கொள்கைகளின் அடிப்படையில் ஆதாரக்கல்வித் திட்டத்தை உருவாக்கினார். சேவா கிராம ஆஸ்ரமத்தில் இயங்கிய அகில இந்திய ஆதாரக்கல்விச் சங்கத்திற்கு காந்தி அடிகள் தலைவராக இருந்தார். அதற்கு திரு.அரியநாயகம் அவர்கள் செயலாளராக இருந்தார். சாந்தி நிகேனத்தில் பணியாற்றிய ஆஷா தேவி என்னும் வங்காளப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பெரும் செல்வக் குடும்பத்தில் பிறந்த ஆஷா தேவி அவர்கள் காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்தில் மேல்நிலைப்பட்டப் படிப்பு படித்தவர். இத்தகைய ஆதர்ச தம்பதியினர் காந்தியடிகளுடன் பணியாற்றியதோடு காந்திஜி மறைந்த பின்னரும் சேவா கிராம ஆஸ்ரமத்திலேயே தங்களுடைய இறுதிக் காலம் வரை வாழ்ந்து வந்தனர். திரு.அரியநாயகம் அவர்கள் தனது மனைவியுடன் 1964ஆம் ஆண்டு தனது தாய் நாடான

(7ம் பக்கம் பார்க்க)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.

சேமிப்பு கணக்கு இலக்கம்
00052120245384
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 171, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக வவுனியா 1ஆம் குறுக்குத்தெரு, இலக்கம் 61-B, இல் அமைந்துள்ள வாணி கணினிப் பதிப்பகத்தில் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதழாசிரியர்: எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி